தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2021

ஆண்டு: 9 திகதி: 20/11/2021

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திரு.ச.தேவராசா

மாணவர் பெயர்: ____________________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 10 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 10 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக.**

1. ஆடு (பெயர்) ____________________________________________

____________________________________________

ஆடு (வினை) ____________________________________________

____________________________________________

2. ஓடு (பெயர்) ____________________________________________

____________________________________________

ஓடு (வினை) ____________________________________________

____________________________________________

3. தை (பெயர்) ____________________________________________

____________________________________________

தை (வினை) ____________________________________________

____________________________________________

4. காய் (பெயர்) ____________________________________________

____________________________________________

காய் (வினை) ____________________________________________

____________________________________________

5. பார் (பெயர்) ____________________________________________

____________________________________________

பார் (வினை) ____________________________________________

____________________________________________

6. களி (பெயர்) ____________________________________________________________

______________________________________________________________________________

களி (வினை) ____________________________________________________________

______________________________________________________________________________

7. பாய் (பெயர்) ____________________________________________________________

______________________________________________________________________________

பாய் (வினை) ____________________________________________________________

______________________________________________________________________________

8. மலர் (பெயர்) ____________________________________________________________

______________________________________________________________________________

மலர் (வினை) ____________________________________________________________

______________________________________________________________________________

9. கனி (பெயர்) ____________________________________________________________

______________________________________________________________________________

கனி (வினை) ____________________________________________________________

______________________________________________________________________________

10. வழி (பெயர்) ____________________________________________________________

______________________________________________________________________________

வழி (வினை) ____________________________________________________________

______________________________________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழ் இலக்கியங்கள் தோன்றி, வளர்ந்த வரலாற்றை விளக்குவது தமிழ் இலக்கிய வரலாறு எனப்படும். தமிழ் இலக்கிய வரலாற்றை சங்க காலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம் (விஜயநகரப் பேரரசர் காலம்), ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு, இருபத்தியோராம் நூற்றாண்டு என எட்டுக் காலங்களாக வகுத்து தமிழ் அறிஞர்கள் ஆராய்கின்றனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்தால் முந்திய காலமாக சங்ககாலம் விளங்குகின்றது. புலவர்கள் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனச் சங்கங்களை அமைத்துத் தமிழ் வளர்த்த காலம் சங்ககாலம் எனப்படுகின்றது. இக்காலம் கி.மு 300 ஆண்டுகளுக்கும் கி.பி 300 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட 600 ஆண்டுகளைக் கொண்டது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இக்காலத்தில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற எட்டுத் தொகை நூல்களும் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை போன்ற பத்துப்பாட்டு நூல்களும் தோன்றின. இந்நூல்கள் அக்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் இடம் பெற்ற போர், வீரம், காதல் போன்றவற்றை எடுத்துக் கூறுகின்றன.

சங்ககாலத்தைத் தொடர்ந்து வந்த காலம் சங்கமருவிய காலம் எனப்படும். இது கி.பி 300 ஆம் ஆண்டிற்கும், 600 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 300 வருடங்களைக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. இக்காலத்தில் திருக்குறள், நாலடியார், இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற பதினெட்டு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களும் தோன்றின. சங்ககால மக்களின் வாழ்க்கையில் இடம்பெற்ற போர், காதல் என்பவற்றில் ஏற்பட்ட பிரச்சனைகளால் சலிப்படைந்த மக்களுக்கு அறக் கருத்துக்களைக் கூறவேண்டிய தேவை ஏற்பட்டமையால் இக்காலத்தில் அறநூல்கள் அதிகளவில் தோன்றின. எனவே இதனை அற இலக்கிய காலம் என்று கூறலாம்.

கி.பி 600 ஆம் ஆண்டிற்கும், 900 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 300 வருடங்களை உள்ளடக்கிய காலம் பல்லவர் காலம் எனப்படும். இக்காலத்தில் தமிழ்நாட்டைப் பல்லவ மன்னர்கள் ஆட்சி செய்தமையால் இது பல்லவர் காலம் என்று அழைக்கப்படுகின்றது. இக்காலத்தில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நாயன்மார்கள் தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களையும், பெரியாழ்வார், பொய்கை ஆழ்வார், ஆண்டாள் போன்றோர் நாலாயிரத்திவ்விய பிரபந்தம்,

நாச்சியார் திருமொழி போன்ற பக்தி இலக்கியங்களையும் உருவாக்கியமையால் பக்திஇலக்கிய காலம் என்று இக்காலம் அழைக்கப்படுகின்றது.

கி.பி 900 ஆம் ஆண்டிற்கும் 1300 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 400 வருடங்களைக் கொண்டதாக சோழர்காலம் விளங்குகின்றது. ஐம்பெருங் காப்பியங்களில் வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி என்னும் மூன்றும், நீலகேசி, சூளாமணி, யசோதரா காவியம், உதயணகுமார காவியம், நாககுமார காவியம் ஆகிய ஐஞ்சிறு காப்பியங்களும் இக்காலத்தில் தோன்றியமையால் இது காவிய காலம் எனப்படுகின்றது. அத்துடன் கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் போன்ற பல சிறந்த புலவர்கள் இக்காலத்தில் சிறந்த இலக்கியங்களை உருவாக்கியமையால் சோழர் காலம் தமிழ்இலக்கிய வரலாற்றின் பொற்காலம் என்று கூறப்படுகின்றது.

கி.பி 1300 ஆம் ஆண்டிற்கும் கி.பி 1600 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட 300 ஆண்டுகளைக் கொண்டதாக நாயக்கர் காலம் விளங்குகின்றது. இக்காலத்தில் தமிழ் நாட்டை தெலுங்கர்களான நாயக்கர்கள் ஆட்சி செய்தமையால் நாயக்கர் காலம் எனப்படுகின்றது. இவர்கள் விஜயநகரப் பேரரசர்கள் என்று அழைக்கப்பட்டமையால் விஜயநகரப் பேரரசர் காலம் என்றும் கூறப்படுகின்றது. இக்காலத்தில் தமிழ்ப் புலவர்களுக்கு உதவிசெய்ய யாரும் இல்லாமையால் அவர்கள் வறுமையில் வாடினர். இதனால் வறட்சி இலக்கியங்களே இக்காலத்தில் தோன்றின.

கி.பி 1600 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஐரோப்பியர் தமிழ் நாட்டிற்கு வருகை தந்து ஆட்சி செய்தனர். இக்காலத்தில் நாவல், சிறுகதை, நாடகம் ஆகிய நவீன இலக்கியங்கள் தமிழில் தோன்றுவதற்கு அவர்கள் காரணகர்த்தாக்களாக அமைந்தனர். அவர்கள் அச்சியந்திரத்தையும், காகிதத்தையும் அறிமுகப்படுத்தினர். இதனால் அதிகமான இலக்கியங்கள் தமிழில் தோன்றின.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்நிலை தொடர்ந்தது. இக்காலத்தில் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டமை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கணினி அறிமுகப்படுத்தப்பட்டது. பல்வேறு தமிழ் இணையத்தளங்கள் உருவாக்கப்பட்டன. ஏராளமான இலக்கியங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டன. நூலகங்களுக்குச் செல்லாமலேயே வீட்டிலிருந்தவாறு காப்பியங்களையும், இலக்கியங்களையும் வாசிக்கக் கூடிய மகத்தான வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்பட்டது. அன்று காவோலையில் இருந்த தமிழ் இலக்கியங்கள் பின்பு காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு இன்று இருபத்தியோராம் நூற்றாண்டில் கணினித் தமிழாக வளர்ச்சியடைந்து வருவது மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும்.

1. தமிழ் இலக்கிய வரலாறு என்றால் என்ன?
தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலங்கள் எட்டையும் எழுதுக.
(4 புள்ளிகள்)

2. எட்டுக் காலங்களிலும் உங்களைக் கவர்ந்த காலம் எது? காரணம் எழுதுக? (4 புள்ளிகள்)

3. சங்க காலம் என்ற பெயர் வருவதற்கான காரணம் என்ன?
(3 புள்ளிகள்)

4. பின்வரும் இலக்கிய வரலாற்றுக் காலங்கள் என்ன இலக்கிய காலம் என்று அழைக்கப்பட்டன? (5 புள்ளிகள்)

| உதாரணம்: சங்க காலம் | அகப் புற இலக்கிய காலம் |
|---|---|
| சங்கமருவிய காலம் | |
| பல்லவர் காலம் | |
| சோழர் காலம் | |
| நாயக்கர் காலம் | |
| ஐரோப்பியர் காலம் | |

5. ஐரோப்பியர் இந்தியாவுக்கு வருகை தராமல் இருந்தால் அந்நிகழ்வு தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியில் எத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும்? (4 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

அன்று சனிக்கிழமை, நான் தமிழ்ப் பாடசாலையில் தமிழ் மொழியைக் கற்ற பின்பு வீடு திரும்பினேன். அப்பா, அம்மா, நான், தம்பி நால்வரும் மதிய உணவை உண்டோம். பிறகு நால்வரும் தொலைக்காட்சியில் ஒரு தமிழ்த் திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். காற்று பலமாக வீசத் தொடங்கியது. வினாடிக்கு வினாடி, நிமிடத்திற்கு நிமிடம், மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் காற்றின் வேகம் அதிகரித்தது. காற்று சூறாவளியாகச் சுழன்றடித்தது. காற்றின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத மரக்கிளைகள் சடார் என்ற சத்தத்துடன் முறிந்து விழுந்தன. பயங்கரமான சத்தத்துடன் இடி இடித்தது. கண்ணைப் பறிக்கும் மின்னல் மின்னியது. சோவென்ற இரைச்சலுடன் மழை பொழியத் தொடங்கியது. தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு என்ன நடக்கப்போகின்றதோ? என்ற பீதியில் நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். அவ்வேளையில் எங்கள் வீட்டின் பின்புறத்தில் உயரமாக வளர்ந்திருந்த மரம் முறிந்து படார் என்ற ஓசையுடன் கூரையின் மீது விழுந்தது. இதனால் பல ஓடுகள் உடைந்தன. சேதமாக்கப்பட்ட கூரை வழியாக மழைநீர் வீட்டுக்குள் வரத் தொடங்கியது. கடவுளே என்ன சோதனை? என்று அம்மா அலறினார். படிப்படியாக வீடு வெள்ளக்காடாக மாறியது. என்ன செய்வது? என்று தெரியாமல் நால்வரும் திகைத்து நின்றோம்................

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தொடர் வாக்கியத்திலிருந்து 15 தனி வாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.**

மண்டபத்தின் இரு பக்கங்களிலும் வாழை மரங்கள் கட்டப்பட்டு நாதஸ்வரம், தவில் ஆகிய மங்கள வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்த வேளையில் பட்டாடைகள் அணிந்து கொண்டு ஆண்களும், பெண்களும் வருகை தந்த போது சிறுமிகள் பன்னீர் தெளித்து வரவேற்க உறவினர்களும், நண்பர்களும் இருக்கைகளில் அமர்ந்த பின்பு மணமகனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த நேரத்தில் மணமகன் அழகான சட்டையும், பட்டுவேட்டியும் அணிந்தவாறு வந்து மணவறையில் தோழனுடன் உட்கார்ந்ததைத் தொடர்ந்து ஐயர் சில திருமணக் கிரியைகளைச் செய்தபிறகு மணமகள் கண்ணைக் கவரும் வண்ணப் பட்டுச் சேலையை அணிந்து கொண்டு வர ஐயர் அவருக்கும் சில கிரியைகளைச் செய்தபின் இருவரும் மாலை மாற்றியதையடுத்து மணமகள் தோழியுடன் சென்று கூறைப்புடவை மாற்றி வந்த பிற்பாடு மணமகன் மணமகளின் கழுத்தில் மாங்கல்யத்தை அணிவிக்க எல்லோரும் மலர் தூவி வாழ்த்தினர்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 12 |
|---|---|---|---|---|---|

சிட்னியில் 25 வருடங்களாக இயங்குகின்ற இயல், இசை, நாடக மன்றச் செயலாளராக உங்களைக் கருதிக் கொள்ளுங்கள். மன்றத்தின் வெள்ளி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஸ்டாலின்50@ஜிமெயில்.கொம் என்ற மின்னஞ்சல் முகவரியில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு மின்னஞ்சல் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 14 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. சிட்னியில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு தமிழ்ப் பாடசாலைகள் செய்கின்ற சேவைகள்
2. சிட்னியில் இயங்குகின்ற தமிழ்த் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவதற்காக நடிகை நயன்தாராவுடன் மேற்கொண்ட நேர்காணல்
3. “சுத்தம் சுகம் தரும்” என்ற தலையங்கத்தில் ஒரு கட்டுரை